CEMCA

# செவிச்செல்வம்

## "Diploma in Community Radio & Mass Communication"

# Radio Enabled Learning

August -2019

STUDY MATERIAL

CHAPTER 3 - RESEARCH AND ANALYSIS FOR COMMUNITY RADIO

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# MEDIA RESEARCH METHODS
# சமுதாய வானொலி ஊடக ஆராய்ச்சி முறைகள்

CHAPTER 3

**EPISODE-12**

SRUTHI CRS 90.8 MHz
Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# ஊடக ஆராய்ச்சி வழிமுறைகள்

- ஊடக ஆராய்ச்சியில் பின்வரும் வழிமுறைகளை பயன்படுத்துகிறார்கள்:

1.Sensex எனப்படும் கணக்கெடுப்பு முறை

2.Survey எனப்படும் கணக்கெடுப்பு முறை

3.Observation எனப்படும் கவனிப்பு முறை

4.Case Study எனப்படும் நிகழ்வு ஆய்வு முறை

5.Interview எனப்படும் நேர்காணல் முறை.

# ஊடக ஆராய்ச்சி வழிமுறைகள்

•ஆராய்ச்சி சில கேள்விகளுக்கு விடைகளை பெற ஒரு திட்டமிட்ட முயற்சி ஆகும்.

•தகவல் தொடர்பு அல்லது ஊடக ஆராய்ச்சியில் ஊடகங்கள் தொடர்பான வினாக்கள் உள்ளடங்கும். அதில் விளக்கங்கள், பகுப்பாய்வு மற்றும் நிகழ்வுகள் உள்ளடங்கும்.

•ஒரு குறிப்பிட்ட முறையைப் பின்பற்றுவதன் மூலம் திட்டமிடப்பட்ட விதத்தில் ஊடக ஆராய்ச்சி செய்யப்படுகிறது.

# Sensex Method

- ➢Sensex என்பது சமூக மக்களிடம் தகவலை பெற்று பதிவு செய்யும் செயல் முறையை குறிக்கும்.
- ➢Sensex கணக்கெடுப்பில் மக்கள் தொகையில் இருக்கும் அனைத்து உறுப்பினர்களிடமும் தகவலை பெற வேண்டும்.
- ➢அப்படி சேகரிக்கப்பட்ட தகவல் மொத்த மக்கள் தொகையின் துல்லியமான பிரதிநிதித்துவம் மாக இருக்கும்.
- ➢Sensex முறையை கையாளும்போது ஒரு சமூகத்தின் மொத்த மக்கள் தொகையை ஈடுபடுத்த வேண்டும். சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தின் பங்களிப்பும் இருக்க வேண்டும்.

# Sensex Method

**Sensex முறையின் நன்மைகள்**:

1.நம்பகத்தன்மை வாய்ந்தது

2.துல்லியமான முடிவுகளை பெறலாம்

3.பிழைகளுக்கான வாய்ப்பு குறைவு

**Sensex முறையின் குறைபாடுகள்**:

1.கணக்கெடுப்பை செய்து முடிப்பதற்கு அதிக செலவாகும்.

2.கணக்கெடுப்பு பணியை முடிப்பதற்கு நீண்ட காலம் தேவைப்படும்.

# Survey Method

- Survey என்பது சமூக மக்கள் தொகையில் ஒரு பகுதி மக்களை மட்டும் தேர்ந்தெடுத்து அவர்களிடம் கணக்கெடுப்பு நடத்தும் ஆய்வு முறை.
- ஒரு பகுதி மக்களின் கருத்து ஒட்டுமொத்த மக்களின் பிரதிநிதி கருத்தாக ஏற்றுக் கொள்ளப்படும்.
- இந்த முறையில் சரியான பிரதிநிதி மாதிரிகளை தேர்ந்தெடுப்பது இம்முறையின் ஆய்வுக்கு நன்மதிப்பை தரும்.
- Survey முறையில் ஒரு குறுகிய மக்களைக் கொண்டு ஆய்வு செய்வதால் விரைவாக முடியக்கூடிய தன்மை வாய்ந்தவை.
- Survey முறை சிக்கனமான ஒரு செயல்முறையாகும்.
- இம்முறையில் நம்பகத்தன்மை குறைவாக இருக்கும். மற்றும் துல்லியமான முடிவுகளை Survey முறையில் பெற இயலாது.

# Observation Method

- இது கவனிப்பு மூலம் தகவல் சேகரிக்கும் ஆராய்ச்சி முறை.
- இந்த முறை பங்கேற்பு ஆய்வாக வழங்கப்படுகிறது.
- Observation முறை ஆய்வானது இரண்டு வகைப்படும்:
  1. **கட்டமைக்கப்பட்ட ஆய்வு**
  2. **கட்டமைக்கப்படாத ஆய்வு**
- கட்டமைக்கப்பட்ட ஆய்வு திட்டமிட்ட கண்காணிப்பில் தகவல் சேகரிக்கப்படும். அது குறிப்பிட்ட மாறிகளை கொண்டு ஒரு முன் வரையறுக்கப்பட்ட அட்டவணையின்படி நடத்தப்படும்.
- கட்டமைக்கபடாத ஆய்வு ஒரு திறந்த முறையில் எந்த ஒரு மாறிகளையும் உட்படுத்தாமல் கட்டுப்பாடு இல்லாமல் நிகழக்கூடிய ஆய்வு.

# Observation Method

**Observation முறையின் நன்மைகள்:**

- நேரடியாக ஆராய்ச்சி நிகழ்வுகளை கண்டு களிக்க முடியும்.
- பயன்பாட்டிற்கு ஏற்றார்ப் போல் வளைந்து கொடுக்கும் தன்மை கொண்டது.
- கண்காணிக்கப்பட்ட தகவலை நிரந்தர பதிவு செய்தல் மூலம் எதிர்காலத்தில் தேவைப்படும்போது குறிப்பு எடுக்க ஏதுவாக இருக்கும்.

**Observation முறையின் குறைபாடுகள்:**

- தகவல் சேகரிக்க நீண்ட காலம் எடுக்கும்.
- கவனிப்பவர்கள் தன்னிச்சையாக முடிவு எடுப்பதற்கு வாய்ப்புள்ளது. கண்காணிக்கப்படும் மாதிரிகள் பார்வையாளர்களால் மாறுதலுக்கு உள்ளாகும் அபாயம் உள்ளது.

# Case Study Method

- **Case Study** முறை ஒரு தனிநபரின் அல்லது ஒரு சிறிய குழுவின் ஆழமான விரிவான ஆய்வை குறிக்கிறது.
- **Case Study** ஒரு அனுபவத்தின் கதையாகவும் இருக்கலாம். இது ஆராய்ச்சியின் முக்கிய அம்சங்களில் ஒரு குறுகிய கவனத்தை செலுத்துகிறது. உயர்மட்ட விவரங்களை அளிக்கிறது. உண்மை வாழ்க்கை சூழலை சித்தரிக்கிறது.
- **Case Study** பொதுவாக சமூக அறிவியல் ஆராய்ச்சியில் பயன்படுத்தப்படுகின்றன.
- **Case Study** பல நன்மைகளை கொண்டது. ஆழமான ஆராய்ச்சி முடிவுகளை தரவல்லது. இம்முறையில் சேகரிக்கப்படும் தகவல் ஒரு இயற்கை அமைப்பு மற்றும் உண்மையான சூழலில் சேகரிக்கப்படுகிறது.

# Interview Method

- **Interview முறை** ஒரு வாய்மொழி தொடர்பு அல்லது இரு வழி உரையாடல் மூலம் தகவலை பரிமாறி கொள்ளும் முறை ஆகும்.
- ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்காணலில் திடமான நடைமுறை பின்பற்றப்படும். கேள்விகள் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் இருக்கும்.
- கட்டமைக்கப்பட்ட நேர்காணலில் எளிதான வழி முறைகளை கொண்டு கேள்விகளை கேட்கலாம்.
- கட்டமைக்க படாத நேர்காணல் முன் தீர்மானிக்கப்படாத கேள்விகளை உள்ளடக்கியது.
- கட்டமைக்க படாத நேர்காணல் கேள்வி கேட்பதற்கு கூடுதலான சுதந்திரத்தை கொடுக்கிறது.

# Interview Method

**Interview முறையின் பலன்கள:**

1. அதிகமான ஆழமான தகவலையும், இயல்பான பதில்களையும் பெற முடியும்.
2. கேள்விக்கான பதில்களை பதிவு செய்து வைக்க முடியும்.
3. கேள்விகளை பற்றிய தவறான விளக்கங்களையும் திரிக்கப்பட்ட பதில்களையும் தவிர்க்க முடியும்.

**Interview முறையின் குறைபாடுகள்**:

1.'மாதிரிகளை அதிகரிக்கும்போது செலவும் அதிகரிக்கும்.

2. மாதிரிகளை அதிகரிக்கும்போது ஆய்வை முடிப்பதற்கு நீண்ட காலம் ஆகும்.